ஒன்றிய அரசுக்கு மேலும் அழுத்தம் தந்து

‘நீட்’ விலக்குப் பெறவே கையெழுத்து இயக்கம்!

அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி பேட்டி!

சென்னை, அக். 25 –

நீட் விவகாரத்தில் மேலும் அழுத்தம் தருவதற்காகவே நீட் விலக்கு கையெழுத்து இயக்கம். மத்தியில் ஆட்சி மாற்றம் ஏற்பட்ட பிறகு நீட் தேர்வில் இருந்து விலக்கு கிடைக்கும் என்று கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி பேட்டியில் குறிப்பிட்டார்.

நீட் தேர்வு எதிர்ப்பு கையெழுத்து இயக்கம் தமிழகம் முழுவதும் நடத்துவது தொடர்பாக காணொலி காட்சி வழியாக ஆலோசனைக்கூட்டம் நடைபெற்றது. தி.மு.க. அமைப்பு செயலாளார் ஆர்.எஸ்.பாரதி தலைமையில் நடைபெற்ற ஆலோசனைக்கூட்டத்தில் கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உள்பட தி.மு.க. அனைத்து அணி செயலாளர்கள் பங்கேற்றனர்.

இதன் பின்னர் செய்தியாளர்களுக்கு பேட்டியளித்த அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ் பாரதி, நீட் விலக்கு கையெழுத்து இயக்கத்தை தமிழகம் முழுவதும் கொண்டு செல்வதற்கான ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றதாக தெரிவித்தார். இதில் நீட் தேர்வு எதிர்ப்பு எதற்கு என்பது குறித்து விவாதிக்கப்பட்டதாக கூறினார். பா.ஜ.க. ஆட்சி வருவதற்கு முன்பாக 15 லட்சம் வங்கியில் செலுத்தப்படும் என்றும் 2 கோடி பேருக்கு வேலை தரப்படும் என கூறியதை செய்தார்களா? என கேள்வி எழுப்பினார். கடந்த ஆட்சியில் நீதிமன்றத்தில் சரியாக வாதாடாத காரணத்தினால் தான் நீட் விவகாரத்தில் வெற்றி பெற முடியவில்லை என்று கூறிய அவர், ஜெயலலிதா, கலைஞர் ஆகியோர் இருந்தபோது தமிழகத்தில் வராத நீட், அ.தி.மு.க.வால் தான் வந்ததாக குற்றம்சாட்டினார். நீட் விவகாரத்தில் மேலும் அழுத்தம் தருவதற்காகவே நீட் விலக்கு கையெழுத்து இயக்கம் என்றும் ஒன்றியத்தில் ஆட்சி மாற்றம் ஏற்பட்ட பிறகு நீட் விலக்கு கிடைக்கும் எனவும் தெரிவித்தார்.

போக்குவரத்து மற்றும் பொதுமக்களுக்கு இடையூறாக கொடிக்கம்பம் வைக்கக் கூடாது என விதி இருந்தும் சண்டை இழுக்கவே பா.ஜ.க. விதிமுறை மீறி கொடிக்கம்பத்தில் பிரச்சினை செய்வதாகவும், முதலமைச்சர் அவர்கள் மேயராக இருந்த போதே கொடி கம்பங்களை அகற்றியுள்ளதாக கூறினார். திமுக கொடி கம்பம் விதிமுறை மீறி எங்கு இருக்கிறது என கூறினால் அகற்ற தயாராக இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இளைஞர் அணி செயலாளர், அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படி டிசம்பர் 17ஆம் தேதி சேலத்தில் நடைபெற உள்ள இளைஞர் அணி 2வது மாநில மாநாடு ‘இல்லம் தேடி இளைஞர் அணி’ உறுப்பினர் சேர்த்தல் மற்றும் நாடாளுமன்ற தேர்தல் குறித்து மதுரை கிழக்கு தொகுதி ஆனையூர் பகுதி கழகம் சார்பில் நடைபெற்ற இளைஞர் அணி செயல்வீரர்கள் கூட்டத்தில் வடக்கு மாவட்ட செயலாளர், வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி சிறப்புரையாற்றினார். உடன் தொகுதி பொறுப்பாளர் பெருநாழி போஸ், மாவட்ட துணை செயலாளார் ஆ.வெங்கடேசன் எம்.எல்.ஏ., மாவட்டப் பொருளாளர் சோமசுந்தர பாண்டியன், பகுதி செயலாளார் மருதுபாண்டியன், மகளிர் அணி அமைப்பாளார் உமாசிங்க தேவன், இளைஞர் அணி நிர்வாகிகள் மருதுராஜா, வெற்றிச்செல்வன், வன்னிமுத்து பாண்டி, இளங்கோவன், மாணவரணி அமைப்பாளர் ஆதிசங்கர், கழக நிர்வாகிகள் ஆனையூர் பெரியசாமி, பாபு, செல்வகணபதி, கலை கார்த்திகேயன், முருகேசன், கோபாலகிருஷ்ணன், கொடிவைரன் மற்றும் கழக நிர்வாகிகள், இளைஞர் அணியினர் உள்ளனர்.

காதர்பாட்சா முத்துராமலிங்கம் எம்.எல்.ஏ. முன்னிலை! திண்டுக்கல் ஐ.லியோனி தலைமையில் பட்டிமன்றம்!

இராமநாதபுரத்தில் கலைஞர் நூற்றாண்டு விழா- “ஏழைப் பங்காளர் கலைஞர்” நிகழ்ச்சி!

அமைச்சர்கள் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன் - எஸ்.ஆர்.ராஜகண்ணப்பன் - சிவ.வீ.மெய்யநாதன் - சி.வி.கணேசன் பங்கேற்பு!

இராமநாதபுரம், அக். 25 -

இராமநாதபுரம் அரசு மருத்துவக்கல்லூரி கூட்டரங்கில் 21.10.2023 அன்று மாநில அளவில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா “ஏழைப் பங்காளர் கலைஞர்” என்னும் மாபெரும் நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன் தலைமையேற்றார். பிற்படுத்த ப்பட்டோர் நலத்துறை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன், சுற்றுச்சூழல் மற்றும் கால நிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வி.மெய்யநாதன், மற்றும் மாண்புமிகு தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர் சி.வி.கணேசன், இராமநாதபுரம் மாவட்ட கழக செயலாளர் காதர் பாட்ஷா முத்துராமலிங்கம் எம் எல் ஏ, ஆகியோர் முன்னிலை வகித்தனர். மேலும் கூடுதல் தலைமைச் செயலர்/வருவாய் நிருவாக ஆணையர் எஸ்.கே.பிரபாகர், நில நிர்வாக சீர்திருத்த ஆணையர் வெங்கடாசலம், மாவட்ட ஆட்சித்தலைவர் பா.விஷ்ணு சந்திரன் ஆகியோர் வர வேற்றனர்.

அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் பேச்சு!

இந்நிகழ்ச்சியில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன் வெற்றி பெற்ற மாணவ, மாணவிகளுக்கு பரிசு வழங்கி விழாப் பேருரை ஆற்றினார்.

சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கும் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா “ஏழை பங்காளர் கலைஞர்” நிகழ்ச்சியில் கலந்து கொள்வதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தான் செய்கின்ற ஒவ்வொரு செயலையும் ஏழைகளுக்காகத்தான் செய்தார்கள். அவர்களின் வழியில் நம்முடைய முதலமைச்சர் அவர்களும் எண்ணற்ற திட்டங்களை ஏழைகள் பயன்பெறும் வகையில் செய்து வருகின்றார்கள். 1977 ஆண்டுகளில் வறுமை அதிகமாக இருந்தது. ஆனால் தற்போது அந்த நிலைமாறி தற்போது திராவிட மாடல் ஆட்சியில் வறுமை குறைந்துள்ளது. இந்த அரங்கத்தில் உள்ளவர்களில் பெண்கள், ஆண்களுக்கு சமமாக அமர்ந்துள்ளனர். இதற்கு காரணம் பெரியார், அண்ணா, கலைஞர் ஆவார்கள். ஏழைகள் வாழ வேண்டும் ஏழைகள் சிறப்போடு இருக்க வேண்டும் ஏழை உயர்ந்தால் தான் நாட்டின் பொருளாதார நிலை உயர்வடையும். ஒரு கிராமத்தில் கூலித்தொழிலாளி இருந்தால் அவர் முன்னேற்றம் இருந்தால்தான் அந்த கிராமம் முன்னேற்றம் அடைந்ததாக அர்த்தம்,

முதலமைச்சர் அவர்கள் அறிவித்த உன்னத திட்டமான கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம் மூலம் பெண்கள் சுயமரியாதையுடன் வாழ தொடங்கியுள்ளனர். அவர்களுடைய பொருளாதார நிலையில் முன்னேற்றம் கண்டுள்ளனர். 20 ஆண்டுகளுக்கு முன்னர் இருந்த முறையை மாற்றி தற்போது மனிதனை பொருளாதார ரீதியாக அனைத்து வகையில் முன்னேறிடும் வகையில் திட்டங்களை வகுத்துக் கொடுத்தவர் முத்தமிழறிஞர் கலைஞர் ஆவார். பொருளாதாரம் உயரும் போது நாகரிகமும் சேர்ந்து வளரும் இந்த நிலையை கொண்டு வந்த பெருமை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களையே சேரும். நடுத்தர மக்களை உயர்ந்த இடத்திற்கு வருவதற்கு உரிய திட்டங்களை தீட்டி செயல்படுத்தி வெற்றி கண்டவர்கள் அண்ணா, கலைஞர் அவர்களின் வழியில் நம்முடைய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆவார்.

இந்த சமுதாயத்திற்கு செய்ய வேண்டிய பணிகளை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் வழிகளை பின்பற்றி செயலாற்றுவோம் என வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் கே.கே.எஸ்.எம்.ஆர்.இராமச்சந்திரன் தெரிவித்தார்.

அமைச்சர் ஆர்.எஸ். ராஜகண்ணப்பன் பேச்சு!

பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன், புகைப்படக் கண்காட்சியினை திறந்து வைத்து பேசுகையில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா இன்றைய தினம் சிறப்பாக கொண்டாடப்பட்டு வருகிறது. நம்முடைய மாவட்டத்தில் மீனவர் மாநாடு நடைபெற்றது. அதனை தொடர்ந்து வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் மற்றும் அமைச்சர் பெருமக்கள் ஆகியோர் தலைமையில் இன்றைய தினம் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா கொண்டாடப்பட்டு வருகின்றது. முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் மனிதநேயமிக்கவர் மிகவும் அன்பாக பேசக்கூடியவர் பண்பாளர் அனைவராலும் மதிக்கப்படக் கூடியவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் ஒரு முதலமைச்சர் மட்டும் இல்லாமல் பிற்படுத்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட மக்களுக்காக சிறுபான்மையினர் மக்கள் என அனைவரும் போற்றக்கூடிய ஒப்பற்ற தலைவர் ஆவார். முத்த மிழறிஞர் கலைஞர் அவர்கள் உழைப்பு உழைப்பு உழைப்பு ஒன்றையே தாரக மந்திரமாக எண்ணி வாழ்ந்தவர். அப்படிப்பட்ட முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்கு விழா நடத்திட முடிவெடுக்கப்பட்டு அமைச்சர் பெருமக்களை விழா நடத்திட அறிவுறுத்தப்பட்டதன் அடிப்படையில் இன்றைய தினம் விழா நடைபெறுகிறது. அவருடைய வழியில் தமிழ்நாடு முதலமைச்சராக பொறுப்பேற்ற நம்முடைய முதலமைச்சர் அவர்கள் ஜாதி, மத, பேதமின்றி அனைத்து மக்களுக்கும் அரசின் உதவிகள் கிடைத்திடும் வகையில் செயல்பட்டு வருகிறார்கள். ஒப்பற்ற தலைவராக விளங்கிய நம்முடைய முத்தமிழறிஞர் தகைலைஞர் அவர்களுக்கு இந்த விழா நடைபெறுவது அதுவும் நம்முடைய இராமநாதபுரம் மாவட்டத்தில் நடைபெறுவது முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்கு நாம் செய்ய வேண்டிய கடமையாகும் என பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜாகண்ணப்பன் தெரிவித்தார்.

அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் பேச்சு!

சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.பெய்ய நாதன், கருத்தரங்கினை துவக்கி வைத்து பேசுகையில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் பொது மக்களின் நலன் கருதி பல என்னற்ற திட்டங்களை வகுத்து அதில் வெற்றி கண்டார்கள். நாம் இன்றைய தினம் பொருளாதாரத்திலும் சரி, கல்வியிலும் சரி நாம் உயர்ந்திருக்கின்றோம் என்றால் அதற்கு காரணம் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களே. முத்தமிழறிஞர் கலைஞர் காலத்தில் அவர் கொண்டு வந்த இலவச மின்சார திட்டம் 1989 தமிழ்நாடு முழுவதும் உணவு உற்பத்தியில் பின் தங்கி இருந்தது. அந்த நேரத்தில் விவசாயிகள் மின்கட்டணம் செலுத்தி விவசாயம் செய்ய முடியாத நிலையில் இருந்து வந்தனர். 1989இல் மாண்புமிகு முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றுவுடன் இலவச மின்சார திட்டத்தை தொடங்கி வைத்தார். இந்த திட்டம் இன்று வரை தொடர்ந்து வருகின்றது. அன்றைய தினம் 13 இலட்சம் விவசாயிகளுக்கு இலவச மின்சாரத்தை தந்ததால் தான் இன்றைக்கு விவசாயத்தின் மூலம் உணவு உற்பத்தியில் இந்தியாவில் தமிழ்நாடு முதலிடத்தில் உள்ளது என்றால் அதற்கு காரணம் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தான். தமிழ்நாட்டில் நெடுஞ்சாலை துறையின் மூலம் நான்கு வழி சாலைகளை ஆறு வழி சாலையாக மாற்றி ரூ.55 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பீட்டில் சாலைகளை அமைத்து தந்தவர் மாண்புமிகு முத்தமிழறிஞர் கலைஞர் ஆவார். இவ்வாறு என்னென்ன தேவையோ அத்தனை கட்டமைப்புகளையும் முடித்துக் காட்டியவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களே.அதே போல் 44வது செஸ் ஒலிம்பியாட் போட்டியில் 187 நாடுகள் 2000 விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகள் பங்கேற்ற மாபெரும் விளையாட்டுத் திருவிழாவினை சென்னையில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நடத்தியதால் உலக நாடுகளே வியக்கும் வகையில் விளையாட்டுப் போட்டியை நடத்திக் காட்டியதன் மூலம் நாம் தமிழ் நாட்டை தலை நிமிரச் செய்தவர் நம்முடைய தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள். சமூக நீதி என்றைக்கும் உயர்த்தி பிடிக்கக் கூடிய தமிழ்நாட்டில் ஆட்சி இன்றைக்கு சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

திராவிட இயக்கத் தலைவர்கள் டாக்டர் நடேசனார், டாக்டர் டி.எம்.நாயராக, தந்தை பெரியாராக, பேரறிஞர் அண்ணாவாக இவர்களின் ஒட்டுமொத்தமாக நமக்கு கிடைத்த தலைவர் தான் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் ஆவார்கள். கலைஞர் தனி மனிதர் அல்ல; கலைஞர் ஒரு சகாப்தம், தமிழ் மொழியினை செம்மொழியாக்கி தந்தவர் அவர்தான். திராவிட இனத்தின் அடையாளம் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை நாம் அனைவரும் ஒன்று சேர்ந்து கொண்டாடுவோம். என சுற்றுச்சூழல் மற்றும் கால நிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வி.மெய்ய நாதன் தெரிவித்தார்.

அமைச்சர் சி.வி.கணேசன் பேச்சு!

தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி.கணேசன், பட்டிமன்றத்தை துவக்கி வைத்து பேசுகையில், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க இன்று நடைபெறும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா இன்று சிறப்பாக நடைபெற்று வருகிறது. தமிழக அரசு முத்தமிழறிஞரின் புகழுக்கு பெருமை சேர்க்கும் வகையில் பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகின்றன. முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் ஏழை, எளிய மக்களின் சாமானிய மக்களின் வாழ்வாதாரம் உயர்வதற்கு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தியவர்.

குறிப்பாக சொல்ல வேண்டுமானால் சுமார் 50 வருடங்களுக்கு முன்னர் சென்னையில் மனிதனை மனிதனே கை ரிக் ஷா கொண்டு இழுத்து செல்வது வழக்கமாக இருந்தது கால்களில் மிதியடிகள் இல்லாமல் இழுத்துச் செல்வார்கள். இந்த நிலையை ஏழை பாட்டாளியின் நிலையை எண்ணி சிந்தித்து இந்த நிலை மாற வேண்டும் என்ற உயர்ந்த நோக்கில் கை ரிக் ஷா வினை தடை செய்து சைக்கிள் ரிக் ஷா திட்டத்தை கொண்டு வந்த ஒப்பற்ற தலைவர் நம்முடைய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களே. அது மட்டுமின்றி அவர்களுக்கு இலவச ரிக்ஷாக்களை வழங்கி அவர்கள் வாழ்வில் புத்துயிர் ஊட்டினார்கள். தொழு நோயாளிகளின் எதிர்கால நலன் கருதி தொழுநோயாளிகள் மறுவாழ்வு திட்டத்தினை கொண்டு வந்தவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். தொழுநோயாளிகள் மறுவாழ்வு இல்லங்களை கட்டி சமூகத்தில் அவர்களும் சமம் என்ற நிலையை கொண்டு வந்தவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். சென்னையில் பூ விற்பவர், பழம் விற்பவர், சிறு தொழில் செய்பவர், நடமாடும் கடைகள் வைத்திருப்பவர்களை பற்றி சிந்தித்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். குடிசை மாற்று வாரியம் என்ற துறையை உண்டாக்கி அவர்களை தங்க வைத்து அழகு பார்த்தவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களே.

இவ்வாறு பல திட்டங்களை தீட்டி மக்களுக்காகவே வாழ்ந்து மக்களின் நலனில் அக்கறை கொண்டு வாழ்ந்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் நம் அனைவரின் இதயத்திலும் வாழ்ந்து வருகின்றார். முத்தமிழறிஞரின் திட்டங்களை நம் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நிறைவேற்ற நினைத்த திட்டங்களை ஒவ்வொன்றாக நிறைவேற்றி வருகிறார்கள். பெண்களுக்கு இலவசமாக பேருந்துகளில் பயணம் மேற்கொள்ளும் திட்டம், புதுமைப்பெண் திட்டம் 1921ல் தந்தை பெரியார் அவர்கள் பெண்களுக்கு சமூகத்தில் சமமாக மதிக்கப்பட வேண்டும் என தீர்மானம் கொண்டு வந்தார்கள். முந்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக பொறுப்பேற்றவுடன் பெண்களுக்கு சொத்தில் சம பங்கு உண்டு என்ற சட்டத்தை கொண்டு வந்து தந்தை பெரியாரின் கனவை நிறைவேற்றி காட்டியவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் என தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி.கணேசன் தெரிவித்தார்.

திண்டுக்கல் ஐ.லியோனி தலைமையில் பட்டிமன்றம்!

தொடர்ந்து ஏழை பங்காளராய் கலைஞர் பெரிதும் ஒளிர்ந்தது அரசியலில், கலையில் என்ற தலைப்பில் பட்டிமன்றம் தமிழ்நாடு பாடநூல் கழக தலைவர் திண்டுக்கல் ஐ.லியோனி, தலைமையில் நடைபெற்றது.

மேலும் மாநில திட்டக்குழு துணைத்தலைவர் முனைவர் ஜெ.ஜெய ரஞ்சன், தலைமையில் ஏழைகளின் தோழமையில் கலைஞர் தந்தது வாழ்வாதாரம் மேம்பாடு குறித்து அரசு தலைமை கொறடா முனைவர்.கோவி.செழியன், கல்வி விடுதலை குறித்து முன்னாள் துணை வேந்தர் முனைவர் சபாபதி மோகன் அவர்கள், பொருளாதார மேம்பாடு குறித்து நாஞ்சில் சம்பத், கருத்துரை வழங்கினார்கள். தொடர்ந்து மகளிர் விடுதலை தந்த கலைஞர் திண்டுக்கல் சக்தி போர்பறை குழுவின் நாட்டுப்புற கலை நிகழ்ச்சி நடைபெற்றது.

அதனை தொடர்ந்து மாணவ, மாணவிகளுக்கு நடத்தப்பட்ட பேச்சுப் போட்டி மற்றும் ஓவியப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசு மற்றும் பாராட்டு சான்றிதழ்களை அமைச்சர் பெருமக்கள் வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சியில் இராமநாதபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் கே.நவாஸ்கனி, பரமக்குடி, சட்டமன்ற உறுப்பினர் செ.முருகேசன், திருவாடானை சட்டமன்ற உறுப்பினர் இராம.கருமாணிக்கம், மாவட்ட வருவாய் அலுவலர் இரா.கோவிந்தராஜலு, மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் உ.திசைவீரன், மாவட்ட ஊராட்சி குழு துணைத்தலைவர் வி.வேலுச்சாமி, மண்டபம் ஊராட்சி ஒன்றிய குழுத்தலைவர் சுப்புலட்சுமி ஜீவானந்தம், மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர் திருமதி.கவிதா கதிரேசன் அவர்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

சாக்கோட்டை ஒன்றியத்தில்

ரூ. 54 லட்சத்தில் முடிவுற்ற பல்வேறு திட்டப்பணிகள்!

அமைச்சர் கே.ஆர்.பெரிய கருப்பன் அர்ப்பணித்தார்!

சிவகங்கை, அக். 25 -

சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூர் தொகுதி சாக்கோட்டை ஒன்றியத்தில் பூலான்பட்டியில் சட்டமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து ரூபாய் 7.50 லட்சத்தில் கலையரங்கமும், ஆவடைபொய்கையில் ரூபாய் 10 லட்சத்து 93 ஆயிரம் செலவில் கட்டப்பட்ட அங்கன்வாடி மையம் தி.சூரக்குடியில் ரூபாய் 14 லட்சத்து 59 ஆயிரத்தில் புதிதாக கட்டப்பட்ட நியாயவிலை கடை, ரூபாய் 6.லட்சத்து 81 ஆயிரம் மதிப்பில் கட்டப்பட்ட சுகாதார வளாகம் ஆக மொத்தம் ரூபாய் 53 லட்சத்து 91 ஆயிரம் செலவில் கட்டப்பட்ட புதிய ஐந்து முடிவுற்ற திட்டப் பணிகள் முடிவுற்ற திட்ட பணிகள் கிராம மக்களுக்கு அர்ப்பணிப்பு விழா மாவட்ட ஆட்சியர் திருமதி ஆஷா அஜித் தலைமையில் நடைபெற்றது. தி.சூரக்குடி ஊராட்சி மன்ற தலைவர் ஏ.ஆர். முருகப்பன் வரவேற்புப் பேசினார்.

இந்த நிகழ்ச்சியில் 53 லட்சத்து 91 ஆயிரம் மதிப்பிலான திட்டங்களை அர்ப்பணித்து கூட்டுறவு அமைச்சர் கே.ஆர்.பெரிய கருப்பன் பேசியதாவது. தமிழகம் முழுவதும் தளபதி அவர்கள் முதல்வராக பொறுப்பேற்ற நாள் முதல் கடந்த இரண்டரை ஆண்டுகளாக பல்வேறு வளர்ச்சி திட்டப்பணிகள் நடைபெற்று வருகிறது. இதில் சிவகங்கை மாவட்டம் அதிகம் கிராமப்புறங்கள் நிறைந்த மாவட்டமாகும். கிராம மக்களின் தேவைகள் நிறைவேற்றும் வகையில் கிராமங்கள் புத்துயிர் பெறும் வகையில் பல்வேறு திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகிறது.. அடிப்படை வசதி கட்டமைப்புகள் கிராமங்களுக்கு அவசியம் ஆகும்.

இதை நிறைவேற்ற வேண்டும் என்று முதல்வர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.

அதன்படி ஒவ்வொரு கிராம பகுதிகளிலும் புதிய அடிப்படை கட்டமைப்பு வசதிகளாக சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வசதி, தெரு விளக்குவசதி, கழிவறை சாலை வசதிகள், போன்ற அடிப்படை தேவைகள் நிறைவேற்றப்பட்டு வருகின்றது. இதுபோல் இப்பகுதியில் பூலான் பட்டியில் சட்டமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து ரூபாய் 7 லட்சத்து 50ஆயிரத்தில் கலையரங்கமும் ஆவடைபொய்கையில் ரூபாய் 10. லட்சத்து 93ஆயிரத்தில் அங்கன்வாடி மையமும், தி.சூரக்குடியில் ரூபாய் 14,லட்சத்து 59 ஆயிரத்தில் புதிய நியாய விலை கடை, ரூபாய் 6.லட்சத்து 81 ஆயிரத்தில் நவீன சுகாதார வளாகமும் கட்டப்பட்டு இன்று பொது மக்களுக்கு அர்ப்பணிக்கப் படுகிறது.

கடந்த அ.தி.மு.க. ஆட்சியில் ரூபாய் ஆறு லட்சம் கோடிக்கும் மேல் அதிகமான கடன் சுமையில் தமிழகத்தை வைத்து விட்டு சென்றுள்ளனர். இந்த நிதி பற்றாக்குறைகளைபோக்கி முதல்வர் அவர்கள் பொறுப்பு ஏற்ற கடந்த இரண்டரை ஆண்டுகளில் பல்வேறு திட்ட பணிகளை நிறைவேற்றி வருகிறார். கிராம மக்கள் முன்னேற வேண்டும். இதன் மூலம் பொருளாதாரம் மேம்படும் என்ற சிந்தனையில் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி அதற்கு நிதியும் ஒதுக்கி வருகின்றார். எனவே கிராம மக்கள் அனைவரும் முதல்வரின் திட்டங்களை நன்கு புரிந்து கொண்டு அவருக்கு உங்களது ஆதரவினை தொடர்ந்து தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் பேசினார். நிகழ்ச்சியில் திட்ட இயக்குனர் சிவராமன் வாழ்த்திப் பேசினார்.

இந்த நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் மு.தென்னவன் பள்ளத்தூர் கே.எஸ்.ரவி, பேரூராட்சி மன்ற தலைவர் திருமதி ராதிகா, ஒன்றிய ஒன்றிய செயலாளர்கள் கே.ஆர். ஆனந்த் சுப.சின்னத்துரை குன்னக்குடி சுப்பிரமணியன், ஒன்றிய துணைச் செயலாளர் முத்துக்குமார், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் கதி.ராஜ்குமார் உட்பட அரசு அலுவலர்கள், கிராமப்புற பொது மக்கள் கலந்து கொண்டார்கள். தொடர்ந்து சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூர் தொகுதியில் வைரவன்பட்டி, எஸ்.புதூர் ஒன்றியம் குளத்துப்பட்டி சிங்கம்புணரி ஒன்றியம் செல்லியம்பட்டி ஆகிய ஊர்களில் ரூபாய் 25 லட்சத்து 43 ஆயிரத்தில் புதிதாக அமைக்கப்பட்ட படிரான்ஸ்பார்மர்கள் மின் மாற்றிகளை மக்களுக்கு அர்ப்பணித்து கூட்டுறவு துறை அமைச்சர் கேஆர். பெரிய கருப்பன் சிறப்புரை ஆற்றினார். இந்த நிகழ்ச்சியில் கோட்டாட்சியர் எஸ் பால்துரை, மின் வாரிய செயற்பொறியாளர் செல்லத்துரை, ஒன்றிய குழு தலைவர் எஸ். சண்முகவடிவேலு, மாவட்ட கவுன்சிலர் ஏ.டி.என். ரவி செயற்பொறியாளர்கள் ஜான் கென்னடி, ஆர் சாத்தப்பன், எம் ராஜா, வட்டாட்சியர் சாந்தி ஒன்றிய துணைச் செயலாளர் முத்துக்குமார், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் கதி.ராஜ்குமார், புதூர் கண்ணன் உட்பட அரசு அதிகாரிகள், கிராம மக்கள் கலந்து கொண்டார்கள்.

என்.சந்திரன் முன்னிலையில்

167வது வட்ட பாக முகவர்கள் கூட்டம்!

ஜெ.நடராஜன் தலைமையில் கழகத்தினர் பங்கேற்பு!

சென்னை, அக். 25 -

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், ஆலந்தூர் தெற்குப் பகுதி, 167வது வட்ட பாக முகவர்கள் கூட்டம் பகுதிச் செயலாளர் என்.சந்திரன் முன்னிலையில் வட்டச் செயலாளர் ஜெ.நடராஜன் தலைமையில் நடைபெற்றது.

அமைச்சரும், மாவட்டச் செயலாளருமான, தா.மோ. அன்பரசன் அறிவுறுத்தலின்படி, ஆலந்தூர் தெற்கு பகுதி செயலாளரும், 12-வது மண்டல குழு தலைவருமான, என்.சந்திரன் முன்னிலையில், 167-வது வட்ட கழக செயலாளர் ஜெ.நடராஜன் தலைமையில், 22.10.2023 அன்று நங்கநல்லூர் 44-வது தெருவில் உள்ள ராஜ்குமார் சுலோக்சனா பள்ளியில் பாக முகவர்கள் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் கோடீஸ்வரன் சிறப்புரையாற்றினார். இதில் 167-வது வார்டு மாமன்ற உறுப்பினர் துர்கா தேவி நடராஜன், பாகம் 355 மற்றும் பாகம் 356 ஆகிய பாகத்தை சேர்ந்த உறுப்பினர்கள், நலச்சங்க நிர்வாகிகள் மற்றும் கழக நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொண்டனர்.

திருக்கோயிலூர் சட்டமன்றத் தொகுதி திருக்கோவிலூர் கிழக்கு ஒன்றியம் குலதீபமங்கலம், விளந்தை, கழுமலம், சொரையப்பட்டு, கொழுந்திராம்பட்டு, அத்திப்பாக்கம், நெடுகம்பட்டு, சடைகட்டி ஆகிய எட்டு ஊராட்சிகளில் உள்ள 19 வாக்குச்சாவடி முகவர்களிடம் (BLA2) உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி ஆலோசனை நடத்தினார். மேலும் எட்டு ஊராட்சிகளில் பொதுமக்களைச் சந்தித்து கோரிக்கைகளை கேட்டறிந்தார். மாவட்டச் செயலாளர் நா.புகழேந்தி எம்.எல்.ஏ, மாவட்டப் பொருளாளர் இரா.ஜனகராஜ், மாநில ஆதி திராவிடர் நலக்குழு இணை செயலாளர் செ.புஷ்பராஜ், மாவட்ட ஊராட்சி குழு துணைத் தலைவர் மு.தங்கம், மாவட்ட துணைச் செயலாளர், நகர மன்றத் தலைவர் டி. என். முருகன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் டி. செல்வராஜ், நகரச் செயலாளர் கோபி கிருஷ்ணன், நகர மன்ற துணைத் தலைவர் குணா, இளைஞர் அணி பாலமுருகன், வழக்கறிஞர் நிஜாம் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.